**ஆண்டு - 6**

# பரீட்சைப் பயிற்சியும் விளக்கமும்

ஆக்கியோன்:
பண்டிதர் க. [illegible] அவர்கள்




வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்
1989

# பாஷைப்பயிற்சியும் விளக்கமும்

## ஆண்டு 6

ஆக்கியோன்

பண்டிதர் க. இராசையா அவர்கள்



பதிப்பாளர்

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை (பதிப்பாளருக்கு) 1989 விலை ரூபா 12-00

அச்சுப்பதிப்பு:-
ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்
63, B. A. தம்பி வீதி,
யாழ்ப்பாணம்.

பதிப்பாளர்:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்,

# பதிப்புரை

''பாஷைப் பயிற்சியும் விளக்கமும்'' என்னும் நூல் வரிசையில் இந்நூல் ஆறும் ஆண்டுக்குரியது. வித்தியாபகுதியினரின் பாடத்திட்டத்துக்கு அமையவும் இக்காலப் பரீட்சை முறைகளைத் தழுவியும் எழுதப்பட்டுள்ளது.

இவ்வகுப்பில் மாணவர் அவசியம் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்களில் விளக்கமும் பயிற்சியும் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாணவர் தாம் கற்கவேண்டிய விஷயங்களில் விரிந்த அறிவைப் பெறவும் கற்றதைத் திருப்பிப் பயிற்சி பண்ணவும் மூலாதாரவிதிகளை நன்கு தெரிந்துகொள்ளவும் தக்கதாய் ஒவ்வோர் பயிற்சியும் சிறந்த முறையில் உதாரணங்களுடன் எழுதப் பெற்றுள்ளது. இந்நூல் ஆறும் ஆண்டு மாணவர்களுக்குப் பெருந்துணை புரியும் தகைமை வாய்ந்தது என்பது எமது கருத்து.

தமிழ்ப் பாஷையில் ஆர்வமுள்ள தமிழறிஞர்கள் இந்நூலையும் அன்புடன் உவந்தேற்றுக் கொள்வார்களென எண்ணுகின்றோம்.

பதிப்பாளர்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி முன்னாள் தமிழ்விரிவுரையாளர்

பண்டிதர் வி. நவரத்தினம் அவர்கள்

(Dip - in - Tamil - Univ. of Ceylon)

எழுதிய

## மதிப்புரை

மாணவர்களுக்குத் தேவையான அறிவை அவர்கள் தரத்திற் கேற்ப உதவுவதோடு ஆசிரியரது கடமை நிறைவேறுவதில்லை. பெற்ற அறிவை மனதில் இருத்தலும், உரிய சந்தர்ப்பங்களில் அதைச் சரியாகப் பாவித்தலும், மேற்கொண்டு பெறவேண்டிய இரு வல்லபங்களாகும். அவையும் கைவந்த இடத்தே மாணவரது அறிவும் ஆசிரியரது கடமையும் பூரணத்துவம் அடைகின்றன. பதித்தல், பிரயோகம் என்னுமிரு வல்லபங்களும் பாடசாலைகளில் மாணவர்களுக்கு மிகக் குறைவாகக் கிடைக்கின்றன. இவற்றையும் வளர்க்கக்கூடிய முறையில் சிறந்த நூல்கள் வெளிவருவது இன்றைய சிறுவர்களுக்குப் பெரும்பயன் தருவதாகும். இக்கருத்துக்கிசைய பண்டிதர் க. இராசையா அவர்கள் ''பாஷைப்பயிற்சியும் விளக்கமும்'' என்னும் இந்நூலை எழுதியுள்ளார்கள். மாணவரது மனப்பாங்கையும், உளவிருத்திக் கிரமத்தையும் அனுசரித்துப் பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்ட இந்நூல் பரீட்சையிற் தப்பாது சித்தியெய்தவும் உதவும் என்பது எனது நம்பிக்கை; பாஷைத் தேவையோடு எதிர் பாராத வகையில் இலக்கிய ஞானமும், இலக்கண அறிவும் ஒருங்கே பெறத்தக்க முறையில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

மாணவரது அறிவு வளர்ச்சி குறித்தும் பல நூல்களை எழுதித் தந்த பண்டிதரது அறிவுப் பணியைப் பொதுவாக ஆசிரியர்களும் சிறப்பாக மாணவர்களும் நல்விருந்தாக ஏற்று அன்னார்க்கு ஊக்கமளிப்பது உலகுக்கும் நற்பயன் நல்குவதாகும்.

வி. நவரத்தினம்

## 3ஆம் பயிற்சி

பின்வரும் ஆண்பாற் சொற்களுக்குப் பெண்பாற் சொற்கள் தருக.

விளக்கம்:- பால் ஐந்து வகைப்படும். அவையாவன:- ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பன.

உயர்திணைப் பொருள்களுள் ஆடவருள் ஒருவரைக் குறிப்பது ஆண்பால் என்றும், பெண்களுள் ஒருவரைக் குறிப்பது பெண்பால் என்றும் கொள்க. ஆடவரேனும் பெண்களேனும் அவ்விருவருங் கலந்தேனும் ஒருவரின் மிக்கவராயின் பலர்பால் என்றும் சொல்லப்படும்.

உதாரணம்:- 1. அவன் — ஆண்பால்
2. அவள் — பெண்பால்
3. அவர்கள் — பலர்பால்

மாணவன் — இதன் பெண்பால் மாணவி.
ஆசிரியன் — இதன் பெண்பால் ஆசிரியை.

| (அ) | | (ஆ) | |
|---|---|---|---|
| 1. | தகப்பன் | 1. | பாட்டன் |
| 2. | அண்ணன் | 2. | சிறுவன் |
| 3. | தம்பி | 3. | நாயகன் |
| 4. | மாமன் | 4. | தலைவன் |
| 5. | மைத்துனன் | 5. | ஒருவன் |
| 6. | சகோதரன் | 6. | குறவன் |
| 7. | பிதா | 7. | வேடன் |
| 8. | நம்பி | 8. | அரசன் |
| 9. | புதல்வன் | 9. | இடையன் |
| 10. | செல்வன் | 10. | வாணிபன் |
| 11. | மகன் | 11. | புலையன் |
| 12. | மாணாக்கன் | 12. | வில்லன் |
| 13. | முட்டவன் | 13. | உத்தமன் |
| 14. | செவிடன் | 14. | பார்ப்பான் |
| 15. | ஊமையன் | 15. | சிநேகிதன் |

## 4ஆம் பயிற்சி

பின்வரும் பெண்பாற் பெயர்களுக்கு ஆண்பாற் பெயர்கள் தருக.

உதாரணம் :- 1. சகோதரி - சகோதரன் 2. நங்கை - நம்பி
3. ஸ்ரீமதி — ஸ்ரீமான் 4. மருத்துவிச்சி — மருத்துவன்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) (i) 1. | தாய் | ............ | (ஆ) (i) 1. | கிழவி | ............ |
| 2. | மனைவி | ............ | 2. | தோழி | ............ |
| 3. | மகள் | ............ | 3. | சிறுமி | ............ |
| 4. | புத்திரி | ............ | 4. | தலைவி | ............ |
| 5. | பாட்டி | ............ | 5. | மாதா | ............ |
| 6. | மாமி | ............ | 6. | கூனி | ............ |
| 7. | தங்கை | ............ | 7. | மருகி | ............ |
| 8. | அக்காள் | ............ | 8. | அரக்கி | ............ |
| 9. | ஆசிரியை | ............ | 9. | சிநேகிதி | ............ |
| 10. | இடைச்சி | ............ | 10. | வேடுவிச்சி | ............ |
| (ii) 11. | செல்வி | ............ | (ii) 11. | உத்தமி | ............ |
| 12. | சுந்தரி | ............ | 12. | துஷ்டை | ............ |
| 13. | குறத்தி | ............ | 13. | மாணவி | ............ |
| 14. | குருடி | ............ | 14. | கன்னி | ............ |
| 15. | பாக்கியவதி | ............ | 15. | நாயகி | ............ |
| 16. | பணக்காரி | ............ | 16. | அரசி | ............ |
| 17. | முடத்தி | ............ | 17. | மணமகள் | ............ |
| 18. | பார்ப்பனி | ............ | 18. | குணவதி | ............ |
| 19. | மைத்துனி | ............ | 19. | பண்டிதை | ............ |
| 20 | பெண் | ............ | 20. | அழகி | ............ |

## 5ஆம் பயிற்சி

பின்வரும் ஒன்றன்பாற் சொற்களைப் பலவின்பாற் சொற்களாகவும், பலவின்பாற் சொற்களை ஒன்றன்பாற் சொற்களாகவும் தருக.

விளக்கம்:- 1. அஃறிணைப் பொருள்களுள் ஒரு பொருளாயின் ஒன்றன்பால் என்றும், ஒன்றுக்கு மிக்க பொருளாயின் பலவின்பால் எனவும் சொல்லப்படும்.

உதாரணம்:- 1. மரம், மாடு, மேசை, புத்தகம் — ஒன்றன்பால்
2. மரங்கள், மாடுகள், மேசைகள், புத்தகங்கள் -பலவின்பால்

| (அ) | | | (ஆ) | | |
|---|---|---|---|---|---|
| (i) 1. | அது | .................. | (i) 1. | மலர்கள் | .................. |
| 2. | மலை | .................. | 2. | இலைகள் | .................. |
| 3. | பூ | .................. | 3. | கனிகள் | .................. |
| 4. | காய் | .................. | 4. | கடிகாரங்கள் | .................. |
| 5. | ஆடு | .................. | 5. | ஆறுகள் | .................. |
| 6. | செடி | .................. | 6. | நாய்கள் | .................. |
| 7. | கொடி | .................. | 7. | முயல்கள் | .................. |
| 8. | பறவை | .................. | 8. | காடுகள் | .................. |
| 9. | நரி | .................. | 9. | அவை | .................. |
| 10. | காகம் | .................. | 10. | சித்திரங்கள் | .................. |
| (ii) 11. | பேனை | .................. | (ii) 11. | கன்றுகள் | .................. |
| 12. | நதி | .................. | 12. | பல | .................. |
| 13. | நாடு | .................. | 13. | பரிசுகள் | .................. |
| 14. | சட்டி | .................. | 14. | வண்டிகள் | .................. |
| 15. | கோப்பை | .................. | 15. | பாதைகள் | .................. |
| 16. | கோடாரி | .................. | 16. | மைக்கூடுகள் | .................. |
| 17. | ஈட்டி | .................. | 17. | வாங்குகள் | .................. |
| 18. | சிலேற்று | .................. | 18. | குளங்கள் | .................. |
| 19. | சேலை | .................. | 19. | பட்டினங்கள் | .................. |
| 20. | தொப்பி | .................. | 20. | மான்கள் | .................. |

## 6ஆம் பயிற்சி

விட்டுப்பட்ட இடங்களை நிரப்புக:-

விளக்கம்:- காலம் மூன்று வகைப்படும்,

அவையாவன:-

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன.

முன்நடந்த செயலைக் குறிப்பது — இறந்தகாலம்
இப்பொழுது நடக்கிற செயலைக் காட்டுவது — நிகழ்காலம்
இனிமேல் நடக்கும் செயலைக் காட்டுவது — எதிர்காலம்

உதாரணம்:- (1) இறந்தகாலம்: நடந்தான். (2) நிகழ்காலம் : நடக்கின்றான். (3) எதிர்காலம் : நடப்பான்.

| இல. | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1. | வந்தான் | ............ | ............ |
| 2. | ............ | வெட்டுகின்றான் | ............ |
| 3. | ............ | ............ | கூவும் |
| 4. | செத்தான் | ............ | ............ |
| 5. | ............ | தைக்கிறாள் | ............ |
| 6. | ஓடினது | ............ | ............ |
| 7. | பறிந்தது | ............ | ............ |
| 8. | ............ | ............ | உண்பீர் |
| 9. | ............ | வேய்கின்றான் | ............ |
| 10. | தின்றான் | ............ | ............ |
| 11. | ............ | ............ | ............ |
| 12. | ............ | ............ | ............ |
| 13. | ............ | ............ | ............ |
| 14 | ............ | ............ | ............ |
| 15 | ............ | ............ | ............ |

## 7ஆம் பயிற்சி

பின்வரும் சொற்களின் கருத்தை விளங்கி அவற்றுக்கு நேரே அதே கருத்துள்ள வேறு சொல் எழுதுக.

விளக்கம்:- ஒரே பொருளைக் குறிக்கும் சொற்கள் ஒத்தகருத்துடைய சொற்கள் எனப்படும்,

உதாரணம்:- கமலம், பங்கயம், அம்புயம் என்பன தாமரையைக் குறிக்கும் சொற்கள் ஆதலால் தாமரை என்னுஞ் சொல்லுக்கு இச்சொற்களெல்லாம் ஒத்தகருத்து உடையவை.

1. உண்மை = சத்தியம்
2. தோணி = நாவாய்
3. கை = கரம்
4. அரசன் = மன்னன்
5. செல்வன் = பணக்காரன்
6. சந்தோஷம் = மகிழ்ச்சி

A. (1)
1. அறம் ..........
2. கடல் ..........
3. கலம் ..........
4. காற்று ..........
5. குளிர் ..........
6. சலம் ..........
7. நாள் ..........
8. தேகம் ..........
9. பட்சி ..........
10. மாதம் ..........

(2)
11. மேகம் ..........
12. காலன் ..........
13. வாரம் ..........
14. கதிரை ..........
15. கடவுள் ..........
16. கணவன் ..........
17. குடித்தான் ..........
18. குரங்கு ..........
19. சிங்கம் ..........
20. சூரியன் ..........

B. (1)
1. துன்பம் ..........
2. நண்பன் ..........
3. பட்டினம் ..........
4. படித்தான் ..........
5. புலவன் ..........
6. புத்திரன் ..........
7. மிருகம் ..........
8. புத்தகம் ..........
9. வணிகன் ..........
10. வறியவன் ..........

(2)
11. ஆறு ..........
12 கண் ..........
13. கூடு ..........
14. சோறு ..........
15. தலை ..........
16. தாய் ..........
17. பசு ..........
18. பூமி ..........
19. சந்திரன் ..........
20. யானை ..........

## 8ஆம் பயிற்சி

பின்வரும் சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக:

உதாரணம் :- கரி: அவன் கரியால் பல் துலக்கிறேன்;

கறி: அவள் கறி சமைத்தாள்.

(அ) 1. அரி ..............................

2. அறி ..............................

3. ஆனி ..............................

4. ஆணி ..............................

5. ஆலை ..............................

6. ஆளை ..............................

(ஆ) 7. மலை ..............................

8. மழை ..............................

9. அரம் ..............................

10. அறம் ..............................

11. வாலை ..............................

12. வாழை ..............................

(இ) 13. கழி ..............................

14. களி ..............................

15. கரை ..............................

16. கறை ..............................

17. பனி ..............................

18. பணி ..............................

## ஆறும் ஆண்டு

### 9ம் பயிற்சி

குறித்த இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்து எழுதுக.

உதாரணம்: (1) பூமி உருண்டை வடிவுள்ளது.

(2) தாமரை காலையில் மலரும்.

(அ) 1. கடவுள் .................... இருக்கிறார்.

2. பூனை .................... குடித்தது.

3. மாடு .................... மேய்ந்தது.

4. அணில் .................... தின்றது.

5. இராமனோடு .................... சென்றாள்.

(ஆ) 6. இராமனின் .................... பரதன்

7. பொய் .................... பாவம்.

8. பொன் .................... சிறந்தது.

9. எல்லாளன் .................... ஆண்டான்

10. கம்பரால் .................... பாடப்பட்டது.

(இ) 11. வள்ளுவர் .................... இயற்றினார்.

12. வாலி .................... கொல்லப்பட்டான்.

13. ஆசிரியர் .................... கற்பித்தார்.

14. கிளி .................... கொன்றது.

15. நாம் .................... நடக்கிறோம்.

(ஈ) 16. தாமரைப்பூ .................... பெரியது.

17. தாழம்பூ .................... நீளமாய் இருக்கும்.

18. மலர்களால் .................... கட்டலாம்.

## 10ஆம் பயிற்சி

எழுவாய், பயனிலை எழுதுக:

உதாரணம்:— சூரியன் கிழக்கில் உதிக்கும்.

1. நாய் குரைக்கும்.
2. தேன் இனிப்பாய் இருக்கும்.
3. வாயால் உணவைச் சாப்பிடுகிறோம்.
4. பசு புல்லைத் தின்னும்.
5. பாக்கு துவர்ப்பாய் இருக்கும்.
6. இடையன் மாடுகளை மேய்த்தான்.
7. பலாப்பழம் மிகவும் பெரியது.
8. தென்னை உயரமாய் வளரும்.
9. அறஞ் செய விரும்பு.
10. நானும் நீயும் போனோம்.
11. பெரியோரின் புத்தியை நாம் கேட்க வேண்டும்.
12. கண்ணன் தேரைச் செலுத்தினான்.
13. கன்னன் தானம் வழங்கினான்.
14. முகில் வானத்தில் தவழ்கிறது.
15. அன்புள்ளவரை எவரும் விரும்புவர்.
16. கெடுவான் கேடு நினைப்பான்.
17. கருணையில் சிறந்தவர் காந்தி.
18. சூரியனால் பயிர்கள் வளர்கின்றன.

| எழுவாய் | பயனிலை |
| --- | --- |
| சூரியன் | உதிக்கும் |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |

பின்வரும் சொற்கள் இருபொருள் தருமென்பதை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

உதாரணம் :- மணம். 1, நளன் தமயந்தியை மணம் புரிந்தான்.
2. மல்லிகை நறுமணம் வீசுகின்றது.

(அ) 1. ஓடு 1. ..............................
2. ..............................

2. கரி 1. ..............................
2. ..............................

3. மடி 1. ..............................
2. ..............................

4. நூல் 1. ..............................
2. ..............................

5. பால் 1. ..............................
2. ..............................

(ஆ) 6. தை 1. ..............................
2. ..............................

7. நாடு 1. ..............................
2. ..............................

8. ஆவி 1. ..............................
2. ..............................

9. இரு 1. ..............................
2. ..............................

10. படி 1. ..............................
2. ..............................

## 12ஆம் பயிற்சி

பின்வரும் சொற்கள் இருபொருள் தருமென்பதை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

(அ) 1. ஆடு
1. ஆடு [illegible]
2. [illegible]

2. கொத்து
1. கொத்தாக அரிசி அளந்தேன்
2. நான் தோட்டத்தில் கொத்தினேன்

3. நாணயம்
1. நான் ஒரு பணம் மாற்றினேன்
2. அவன் நாணயத்தில் நேர்மை

4. ஆடி
1. மாதத்தில் ஆடியும் வரும்
2. அவள் [illegible]

5. மணி
1. ......
2. ......

(ஆ) 6. பட்டம்
1. ......
2. ......

7. நா
1. ......
2. ......

8. கடு
1. ......
2. ......

9. அணி
1. ......
2. ......

10. காலை
1. ......
2. ......

# 13 ஆம் பயிற்சி

## (அ) தன்வினை – பிறவினை

### 1. தன்வினை

விளக்கம்: கருத்தா தானே செய்கின்றவினை தன்வினை எனப்படும்.

உ – ம்: (i) நீ நடந்தாய். (ii) நான் நடந்தேன்.
(iii) கல்வி கற்றான்.

### 2. பிறவினை

விளக்கம்: கருத்தா பிறரைக்கொண்டு செய்விக்கும் வினை பிறவினை எனப்படும்.

உ – ம்: (i) கல்வி கற்பித்தான். (ii) கோயிலைக் கட்டுவித்தான்.
(iii) அவனை வருவித்தேன்.

### பயிற்சி

*I.* பின்வரும் தன்வினை வாக்கியங்களைப் பிறவினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. அவன் பாடம் படித்தான்.

.........................................................

2. அவன் வீட்டைக் கட்டினான்.

.........................................................

**II. பின்வரும் பிறவினை வாக்கியங்களைத் தன்வினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. நான் பாடம் படிப்பித்தேன்.

.........................................................

2. கண்ணன் கட்டுவித்த மாளிகை.

.........................................................

# (ஆ) உடன்பாட்டுவினை — எதிர்மறைவினை

## 1. உடன்பாட்டுவினை

விளக்கம் :— உடன்பாட்டு வினையாவது, தொழிலினது நிகழ்ச்சியை உணர்த்தும் வினையாம்.

உ-ம் :- (i) படித்தான் (ii) படிக்கிறான் (iii) படிப்பான்

## 2. எதிர்மறைவினை

விளக்கம் :- எதிர்மறை வினையாவது, தொழில் நிகழாமையை உணர்த்தும் வினையாம்.

உ-ம் : (i) படித்திலன் ii) படிக்கிறானில்லை (iii) படியான்

I. பின்வரும் வாக்கியங்களில் உள்ள வினைகள் உடன்பாட்டு வினையாயின் உடன்பாடு என்றும், எதிர்மறை வினையாயின் எதிர்மறை என்றும் எழுதுக.

1. மாணவர்கள் எல்லோரும் வகுப்புக்கு வந்தார்கள்.
   ..............................................................
2. கமலா நன்றாகப் பாடுவாள். ..............................
3. இந்தக்கிளி நன்றாகப் பேசமாட்டாது. ..............................
4. அவன் மழையில் நனையவில்லை ..............................
5. இந்தமாடு வேகமாக ஓடமாட்டாது. ..............................
6. இன்று மழை பெய்யும். ..............................
7. இம்மரம் காற்றுக்கு விழாது. ..............................
8. எங்கள் ஆசிரியர் நன்றாகப் பாடுவார். ..............................
9. இன்று புயல் அடிக்க மாட்டாது. ..............................
10. முன்பு சோழர்கள் இலங்கையின் மீது படையெடுத்தார்கள்.
    ..............................................................

# (இ) மரபுச்சொல்

விளக்கம் ;- மரபாவது உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் எப் பொருட்டு எப்பெயர் வழங்கிவருமோ, அப்பொருளை அச் சொல்லாற் கூறலாம்.

I. அஃறிணைப் பெயர் :-

உ - ம் :

| பிராணி | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|
| 1. எருமை | — எருமைக்கடா | — எருமைக்கிடாரி |
| 2. ஆடு | — கடா, தகர் | — மறி |
| 3. குரங்கு | — கடுவன் | — மந்தி |
| 4. யானை | — களிறு | — பிடி |
| 5. மான் | — கலை | — பிணை |
| 6. மாடு | — காளை | — பசு |
| 7. கோழி | — சேவல் | — பேடு |

II. இளமைப்பெயர்கள் :-

1. மாடு — கன்று
2. குரங்கு — குட்டி
3. எருமை — கன்று
4. புலி — குட்டி
5. கீரி — பிள்ளை
6. கோழி — குஞ்சு
7. அணில் — குஞ்சு
8. குதிரை — குட்டி

III. 1. வாழை — குட்டி
2. வேம்பு — கன்று
3. மா — கன்று
4. பலா — கன்று
5. பனை — வடலி
6. தென்னை — கன்று, பிள்ளை
7. கமுகு — கன்று, பிள்ளை
8. எலுமிச்சை — கன்று

IV. பிராணிகளும் தொனிகளும் :

1. அணில் — கீச்சிடும்
2. ஆடு — கத்தும்
3. ஆந்தை — அலறும்
4. எருது — முக்காரம் போடும்
5. கழுதை — கத்தும்
6. குயில் — கூவும்
7. குருவி — கீச்சிடும்
8. கோழி — கொக்கரிக்கும்
9. சிங்கம் — கர்ச்சிக்கும்
10. சேவல் — கூவும்
11. தவளை — கத்தும்

## பயிற்சி

I. கீறிட்ட இடங்களை நிரப்புக:

| பிராணி | ஆண்பால் | பெண்பால் | பொதுப் பால் | தொனி | இளமைப் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. நாய் | ஆண்பால் | ........ | ........ | ........ | ........ |
| 2. பூனை | ........ | ........ | ........ | ........ | ........ |
| 3. மாடு | ........ | ........ | ........ | ........ | ........ |
| 4. யானை | ........ | ........ | ........ | ........ | ........ |
| 5. கோழி | ........ | ........ | ........ | ........ | ........ |
| 6. புலி | ........ | ........ | ........ | ........ | ........ |

II. கீறிட்ட இடங்களில் ஏற்ற சொல்லை வைத்தெழுதுக.

1. இன்று எங்கள் தோட்டத்தில் இருபது வாழைக் ........................ பதினைந்து எலுமிச்சங் ........................ பத்துத் தென்னம் ........................ பன்னிரண்டு கமுகம் ........................ நாட்டப்பட்டன.

2. 1. ஆனைமேய்ப்பான் ........................

   2. ஆடுமேய்ப்பான் ........................

   3. குதிரைக் ........................

   4. கீரிப் ........................

   5. வேப்பங் ........................

## (ஈ) இடம்

விளக்கம்:- இடம் என்பது சொற்கள் வழங்கும் தானம், அது:

(1) i. தன்மை இடம் ii. முன்னிலை இடம்
iii. படர்க்கை இடம் என மூவகைப்படும்.

(2) இவ்விடவகையால் பெயர்ச்சொல் தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர், படர்க்கைப்பெயர் எனப்படும்.

1. தன்மைப்பெயர்: (தன்மை இடத்தைக் குறித்து வரும் பெயர்.)
உ-ம்: நான், யான், நாம், யாம், நாங்கள், யாங்கள்.

2. முன்னிலைப்பெயர்: (முன்னிலை இடத்தைக் குறித்து வரும் பெயர்.)
உ-ம்: நீ, நீர், நீவிர், நீங்கள்.

3. படர்க்கைப் பெயர்: (படர்க்கை இடத்தைக் குறித்து வரும் பெயர்.)
உ-ம்: அவன், அவள், இராமன், இலக்குமி, அவர்கள், அரசர், யானை, அவை, எலிகள் முதலியன படர்க்கைப் பெயர்கள்.

### வினைமுடியும் விதம்

1. தன்மையெழுவாயோடு முன்னிலை எழுவாயேனும், படர்க்கையெழுவாயேனும், இவ்விரண்டெழுவாயேனும், அடுக்கிவரின், தன்மைப்பன்மைப் பயனிலைகொண்டு முடியும்.

உ-ம்: 1. யானும் நீயும் போயினோம்.
2. யானும் அவனும் போயினோம்.
3. யானும் நீயும் அவனும் போயினோம்.

2. முன்னிலையெழுவாயோடு படர்க்கையெழுவாய் அடுக்கிவரின் முன்னிலைப் பன்மைப் பயனிலை கொண்டுமுடியும். இது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை எனப்படும்.

உ-ம்:- நீயும் அவனும் போயினீர்.

3. இரண்டு முதலிய உயர்திணைப் படர்க்கையெழுவாய் அடுக்கிவரின் பலர்பாற் படர்க்கை பயனிலைகொண்டு முடியும். இரண்டு முதலிய அஃறிணைப் படர்க்கையெழுவாய் அடுக்கிவரின், பலவின்பால் படர்க்கைப் பயனிலைகொண்டு முடியும்

உ-ம்: 1. நம்பியும் நங்கையும் வந்தார்கள்.
2. யானையுங் குதிரையும் வந்தன.

## பயிற்சி

I. வாக்கியத்தை முடித்து எழுதுக.

1. அரசனும் அமைச்சனும் ..............................
2. ஆடுங் குட்டியும் ..............................
3. பசுவும் குதிரையும் ..............................
4. இராமனும் இலக்குமணனும் சீதையும் வனத்துக்கு..............................
5. தாயும் பிள்ளையும்..............................
6. அவனும் நீயும் ..............................
7. மானும் மரையும் குட்டிகளும் ..............................

II. பின்வரும் வாக்கியங்கள் எவ்வெவ்விடப் பெயர் சேர்ந்து எம்முடிவை ஏற்றனவென்பதைக் கூறுக.

1. நானும் நீயும் படித்தோம்.

..............................

2. நானும் அவனும் படித்தோம்.

..............................

3. நானும் நீயும் அவனும் படித்தோம்.

..............................

4. நீயும் அவனும் படித்தீர்கள்.

..............................

## 14ஆம் பயிற்சி

# (அ) சுட்டெழுத்துக்கள்

1. சுட்டெழுத்துக்கள்,

விளக்கம்: அ, இ, உ, இம்மூன்று உயிரெழுத்துக்களும் சொல்லின் முதலில் ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுகையில் சுட்டெழுத்துக்கள் எனப் பெயர்பெறும்.

2. சுட்டு:- அகச்சுட்டு, புறச்சுட்டு என இருவகைப்படும்.

(1) அகச்சுட்டு:- சொல்லின் அகத்திலேயே (உள்ளேயே) இருந்து ஒரு பொருளைச் சுட்டிக்காட்டுவது.

உ-ம்: அவன், இவன், உவன்,

(2) புறச்சுட்டு:- சொல்லுக்குப் புறத்தில் (வெளியில்) இருந்து ஒரு பொருளைச் சுட்டிக்காட்டுவது.

உ-ம்: அம்மலை, இப்பையன், உவ்வீடு.

(அ) சுட்டுச்சொல் அவன், இவன், உவன் என்று ஒரு சொல்லில்வரின் அது அகச்சுட்டாகும்.

அவ்வீடு, இம்மலை, உவ்வீடு என ஒரு தொடராய் இரண்டு சொற்கள்வரின் அது புறச்சுட்டாகும்.

### பயிற்சி

I. பின்வரும் வாக்கியங்களில் உள்ள சுட்டெழுத்துக்களைக் குறிப்பிடுக:

(அ) அந்தப்பசு இவனை உதைத்தது. ..............................

(ஆ) அவன் பெற்றமகன் இவன். ..............................

(இ) இந்தப்பிள்ளை அங்கு வந்தான். ..............................

(ஈ) இவன் அவன் சகோதரன். ..............................

# (ஆ) வினவெழுத்துக்கள்

விளக்கம்: 1. வினவெழுத்துக்கள் :- அவை முறையே எ, யா, ஆ, ஓ, ஏ என்பன.

2. எ, யா இரண்டும் சொல்லுக்கு முதலில் வரும்.

3. ஆ, ஓ இரண்டும் சொல்லுக்குக் கடைசியில் வரும்.

4. ஏ சொல்லுக்கு முதலிலும் கடைசியிலும் வரும்.

உ-ம்: 1. எவன், எவனை - இதில் "எ" வினவெழுத்து.

2. யார், யாவன் - இதில் "யா" வினவெழுத்து.

3. அவனா-இதில் "னா" என்பதிலுள்ள "ஆ" வினா எழுத்து

4. அவனோ—இதில் "னோ" என்பதிலுள்ள "ஓ" வினா எழுத்து

5. ஏது - இதில் "ஏ" வினவெழுத்து.

6. அவனே - இதில் "னே" என்பதில் உள்ள "ஏ" வினா எழுத்து.

## பயிற்சி

1. இவ் வாக்கியங்களில் உள்ள வினவெழுத்துக்களைக் குறிப்பிடுக.

(அ) அவன் ஏன் போனான் ?

........................................................................................................

(ஆ) அவள் வந்தாளா ?

........................................................................................................

(இ) இங்கு வந்தவன் யாவன் ?

........................................................................................................

(ஈ) வந்தது இதுவா ?

........................................................................................................

(உ) அங்கு வந்தது அதுவா ?

........................................................................................................

(ஊ) பாட்டுப் பாடியது யாது ?

........................................................................................................

# (இ) பெயர்ப் பயனிலை

விளக்கம்: பயனிலை பெரும்பாலும் வினைமுற்றாகவேயிருக்கும்; சில இடங்களில் வினாவும், பெயரும் பயனிலையாக வரும்.

1. உ-ம்: கடவுள் உலகத்தைப் படைத்தார்; இவ்வாக்கியத்தில் "படைத்தார்" என்னும் வினைமுற்றே பயனிலையாகவந்தது.

2. உ-ம்: எல்லா உலகங்களையும் படைத்தவர் கடவுள். இவ்வாக்கியத்தில் "கடவுள்" என்னும் பெயர் பயனிலையாக வந்தது. கடவுள் — பெயர்ப்பயனிலை.

3. உ-ம்: இது பூமி- இவ்வாக்கியத்தில் "பூமி" என்பது பெயர்ப் பயனிலை.

4. உ-ம்: நீ கண்டது எது? இவ்வாக்கியத்தில் "எது" என்னும் வினா பெயர்ப் பயனிலையாக வந்தது.

## பயிற்சி

பெயரும் வினாவும் பயனிலையாக வரத்தக்கதாய் ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

பெயர்:
1. ..........
2. ..........
3. ..........

வினா
4. ..........
5. ..........

## (ஈ) இணைமொழிகள் பொருளுடன்

| | |
|---|---|
| அகம்புறம் | — உள்ளும் வெளியும் |
| அங்குமிங்கும் | — இடையிடையே |
| அந்திசந்தி | — மாலைகாலை |
| அடிக்கடி | — பலமுறையும் |
| அடிமுடி | — காலுந் தலையும். |
| அருமைபெருமை | — சீர்சிறப்பு |
| அரைகுறை | — பூரணமாய் முடியாமை |
| அல்லோலகல்லோலம் | — பெருஞ்சங்கடம் |
| ஆதியந்தம் | — தொடக்கமும் முடிவும் |
| ஆடிப்பாடி | — சந்தோஷமாக |
| ஆடையாபரணம் | உடை அணி |
| ஆய்ந்தோய்ந்து | — ஆறுதலாய் விசாரித்து |
| ஆரத்திர | — முற்றாக |
| ஆறித்தேறி | — ஆறுதலடைந்து தெளிந்து |
| இகபரம் | — இம்மை மறுமை |
| இங்குமங்கும் | — இடையிடையே |
| இன்பதுன்பம் | — சுகமுந்துக்கமும் |
| இன்னார் இனியார் | — பகைவர் நண்பர் |
| உருவும் திருவும் | — அழகும் பொருளும் |
| உயர்வு தாழ்வு | — ஏற்றம் இறக்கம் |
| ஊண் உடை | — உண்டியும் உடையும் |
| ஊண் உறக்கம் | — உணவும் நித்திரையும் |
| ஏறக்குறைய | — கூடக்குறைய |
| ஒட்டியுனர்ந்து | — மெலிந்து தோல்பற்றி |
| ஓடியாடி | — முயற்சிப்பட்டு |
| கங்குகரை | — வரம்பு எல்லை |

| | | |
|---|---|---|
| கட்டிக்காத்து | — | பேணிப் பாதுகாத்து |
| கண்ணுங்கருத்தும் | — | அவதானமும் நோக்கமும் |
| கண்ணீரும் கம்பலையும் | — | அழுகையும் சோகமும் |
| கண்டும் காணமலும் | — | தெரிந்தும் தெரியாமலும் |
| காலநேரம் | — | ஏற்றகாலம் |
| கையும்மெய்யும் | — | உடனுக்குடன் |
| குன்றும் குழியும் | — | மேடும் பள்ளமும் |
| சின்னஞ்சிறிய | — | மிகச்சிறிய |
| நாளும்கோளும் | — | நல்லநாளுங் கிரகமும் |
| வாடிவதங்கி | — | உலர்ந்து |
| வாழ்வு தாழ்வு | — | இன்பதுன்பம் |
| விதிவிலக்கு | — | முறையானது முறையற்றது |
| விருப்பு வெறுப்பு | — | உவத்தல் காய்தல் |

## பயிற்சி

அடிக்கடி, அரைகுறை, கங்குகரை, கண்ணுங்கருத்தும், வாடி வதங்கி என்னும் இணைமொழிகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வசனத்தில் அமைக்குக;

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

# (உ) இரட்டைச் சொற்றொடர்

விளக்கம்:- ஒரு சொல் இரட்டித்துவரின் இரட்டைச் சொற்றொடர் எனப்படும். அச்சொல் பிரிந்து தனித்து ஒலிப்பதில்லை; இரட்டைச்சொற்கள் பெரும்பாலும் ஒலிக் குறிப்பாகவே இருக்கும். (ஒலி = சத்தம்)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | கமகம | — | மிகமணத்தல் | — | கமகம என மணத்தல் |
| 2. | சதசத | — | சதசதப்பு | — | ஈரப்பற்று |
| 3. | கலகல | — | கலகலத்தல் | — | ஒலித்தல் |
| 4. | கறகற | — | கறகறப்பு | — | தொந்தரவு |
| 5. | கிடுகிடு | — | கிடுகிடுத்தல் | — | நடுக்கம் |
| 6. | கிணுகிணு | — | கிணுகிணுத்தல் | — | மெல்லென இரைதல் |
| 7. | குடுகுடு | — | குடுகுடுத்தல் | — | துரிதமாய் ஓடித்திரிதல் |
| 8. | குபுகுபு | — | குபுகுபுவெனல் | — | விரைந்துசெல்லல் |
| 9. | சரசர | — | சரசரத்தல் | — | ஒலித்தல் |
| 10. | குளுகுளு | — | குளுகுளுத்தல் | — | மெதுமெதுத்தல் |

## பயிற்சி

கிடுகிடு, சலசல, நறுநறு, படபட, குடுகுடு என்னும் இரட்டைச் சொற்றொடர்களின் பொருள் விளங்க வசனங்கள் அமைக்குக.

.............................................................................

.............................................................................

.............................................................................

.............................................................................

.............................................................................

## 15 ஆம் பயிற்சி

I. பின்வரும் பகுதியை வாசித்து அதற்குக் கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.

முற்காலத்தில் தமிழ்நாடு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சேர நாடு, சோழ நாடு, பாண்டி நாடு என்பன அவையாகும். பறம்புநாடு என்பது பாண்டிநாட்டின் ஒரு பகுதியாக அமைந்திருந்தது. பாரி என்னும் சிற்றரசர் அந்நாட்டை ஆண்டு வந்தார். இரப்போர்க்கு வரையாது கொடுப்பவரே வள்ளல் என அழைக்கப்படுவர். பாரியும் அத்தன்மை நிறைந்தவராதலின் வள்ளல் என அழைக்கப்பட்டார். ஒருநாள் பாரி தனது பறம்பு நாட்டைச் சுற்றிவரும்போது வழியில் ஒரு முல்லைக்கொடி படர்வதற்கு ஒரு கொம்பும் இன்றியிருப்பதைக் கண்டார். உடனே தனது தேரை அக்கொடியினருகில் நிறுத்தினார். நிலத்திலே இருந்த அக்கொடியை எடுத்துத் தனது தேரின் மேல் படரவிட்டார். இதனால் முல்லைக்கொடிக்குத் தேரைக் கொடுத்த வள்ளல் எனப் பாரியின் புகழ் தமிழ் நாடெங்கும் பரவியது. கபிலர் என்னும் புலவர் பாரியின் ஆருயிர்த் தோழராய் இருந்து வந்தார்.

1. தமிழ்நாடு முற்காலத்தில் எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது?

.....................................................................................

2. முப்பிரிவுகளிற் பறம்பு நாடு எப்பிரிவைச் சேர்ந்தது?

.....................................................................................

3. பறம்பு நாட்டை அரசுபுரிந்தவர் யாவர்?

.....................................................................................

4. அவர் பெற்றிருந்த சிறந்த குணம் யாது?

.....................................................................................

5. "வள்ளல்" என்னும் சொல்லுக்குப் பொருள் என்ன?

..................................................................

6. தமிழ்நாடெங்கும் பாரியின் புகழ் பரவியது எதனால்?

..................................................................

7. பாரியின் ஆருயிர்த் தோழர் யாவர்?

..................................................................

II. A. பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொற்கள் தருக:

1. உறக்கம் ..................
2. பெருக்கம் ..................
3. ஆத்திரம் ..................
4. கொடுங்கோல் ..................
5. அவமானம் ..................
6. இலட்சணம் ..................

B. ஒத்த கருத்துள்ள சொற்கள் தருக.

1. புதல்வன் ..................
2. அன்னை ..................
3. வீடு ..................
4. போனன் ..................
5. அரசன் ..................
6. நண்பன் ..................
7. யுத்தம் ..................
8. இரத்தம் ..................
9. ஆபரணம் ..................
10. இலாபம் ..................

III. A. பின்வரும் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக எழுதுக.

1. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினர்.

..................................................................

2. இராமன் இலங்கை வேந்தனைக் கொன்ருன்.

..............................................................................

3. உபாத்தியாயர் கணிதம் கற்பித்தார்.

..............................................................................

4. வேடன் வேங்கையைக் கொன்ருன்.

..............................................................................

B. கீழ்வரும் செயப்பாட்டுவினை வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங்களாக்குக:

1. தமயந்தியால் மலர்கள் பறிக்கப்பட்டன;

..............................................................................

2. கண்ணனல் வேய்ங்குழல் ஊதப்பட்டது.

..............................................................................

3. தமிழர்களால் தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

..............................................................................

IV. பின்வரும் வாக்கியங்களை ஒரு வாக்கியமாகச் சேர்த்து எழுதுக.

1. நான் காலையில் எழுந்தேன். காலைக்கடன் முடித்தேன். கடவுளை வணங்கினேன்,

..............................................................................

..............................................................................

2. திருவள்ளுவர் ஒரு புலவர். அவர் திருக்குறளை இயற்றினர்; அது யாவராலும் போற்றப்படுகிறது.

..........................................................................................

..........................................................................................

3. அநுமான் இலங்கைக்கு வந்தான். சீதையைக் கண்டான். இலங்கைக்கு எரியூட்டினன்; மீண்டும் இராமனை அடைந்தான்;

..........................................................................................

..........................................................................................

V. 'பூந்தோட்டம்', 'ஆகாயவிமானம்' என்பவைகளுள் ஒன்றைப் பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

VI. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுக.

1. கூரை : ..........................................................................

2. கூறை : ..........................................................................

3. வாலை : ..........................................................................

4. வாழை: ..........................................................................

5. பனி: ..............................................

6. பணி: ..............................................

VII. A. பின்வரும் பதங்களைச் சேர்த்து எழுதுக.

உதாரணம்:- 1. தோட்டை + பழம் = தோட்டம்பழம்
2. பொன் + காப்பு = பொற்காப்பு என்பது போல

1. ஆண்டு + ஆண்டு = ..............................
2. புளி + பழம் = ..............................
3. வேம்பு + மரம் = ..............................
4. மாதுளை + பழம் = ..............................
5. ஆறு + கரை = ..............................

B. பின்வரும் பதங்களைப் பிரித்து விடுக.

1. பன்னிரண்டு = .................. + ..................
2. ஆலமரம் = .................. + ..................
3. வட்டப்பலகை = .................. + ..................
4. தேங்காய் = .................. + ..................
5. பனம்பழம் = .................. + ..................

VIII. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக,

1. சிவரைச் சாணியால் மெழுகினுள்.

..............................................................

2. காசு பொட்டிக்குள் இருந்தது.

..............................................................................................................

3. இராமன் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினான்.

..............................................................................................................

4. நானும் என்ரை தோழரும் கோவிலுக்குச் சென்றேன்.

..............................................................................................................

IX. உமது சுகவீனம் காரணமாகப் பாடசாலைக்கு வரமுடியாது இருப்பது குறித்து, தலைமையாசிரியருக்கு ஒரு கடிதம் எழுதுக.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

X. பின்வரும் அடுக்கு மொழிகளிற் பொருத்தமானவற்றைக் கீறிட்ட இடங்களில் வைத்து எழுதுக.

கூட்டங்கூட்டமாய், படிப்படியாக, குலைகுலையாய்,
கொத்துக்கொத்தாய், தாரைதாரையாக, பாடிப்பாடி.

1. நாம் கல்வியில் ............ முன்னேற வேண்டும்.
2. திராட்சைப் பழங்கள் ............ காய்த்துத் தொங்குகின்றன.
3. மலர்கள் ............ பூத்திருக்கின்றன.

4. பறவைகள் ............................ப் பறந்து செல்கின்றன.

5. மழை ............................ பெய்கின்றது.

6. அவர்கள் ............................ செய்கிறார்கள்.

## 16ஆம் பயிற்சி

1. பின்வரும் பகுதியை வாசித்தபின் கீழேயுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பாண்டவருடைய தாயின் பெயர் குந்திதேவி. குந்திதேவியின் தமையன வசுதேவன். அவன் யதுகுலத்தைச் சேர்ந்தவன். வசுதேவனுக்கு உரோகிணி, தேவகி என்னும் இரு மனைவியர் இருந்தார்கள். உரோகிணி வயிற்றில் பலராமனும், தேவகி வயிற்றில் கண்ணனும் பிறந்தனர். வசுதேவன் இறந்தபின் அவனுடைய மனைவிமாரும் பிள்ளைகளும் மதுரையை விட்டுத் துவாரகை சென்று அங்கு வாழ்ந்தார்கள். பலராமன் அரசு புரிந்தான். தம்பியாராகிய கண்ணன், அவனுக்கு அமைச்சனாயிருந்து வந்தான். கண்ணன் தனது இளம் பிராயத்தில் இருந்தே பாண்டவர்பால் அதிக நேயம் பூண்டிருந்தான். அவன் அருச்சுனனின் ஆருயிர்த்தோழன். அருச்சுனன் கண்ணனின் உதவியால் காண்டவ வனத்தை அழித்துச் சிறந்த நகராக்கினன்.

1. பாண்டவருடைய தாயின் பெயர் யாது?

குந்தி தேவி ............................

2. குந்திதேவியின் சகோதரனது பெயர் என்ன?

வசுதேவன் ............................

3. வசுதேவனுடைய மனைவிமார் யாவர்?

உ ரோகினி தேவகி ............................

4. கண்ணனின் தாயார் யார்?

தேவகி

5. கண்ணன், பலராமன் முதலானோர் துவாரகை சென்றதேன்?

..................................................

6. அருச்சுனனின் ஆருயிர்த்தோழன் யார்?

..................................................

7. அருச்சுனன் யாருடைய உதவியால் காண்டவ வனத்தை அழித்தான்?

..................................................

II. பின்வரும் வாக்கியங்களுக்கு எழுவாய், பயனிலே, செயப்படுபொருள் கூறுக.

1. அருச்சுனன் வனத்தை அழித்தான்.
2. கண்ணன் தேரைச் செலுத்தினான்.
3. பலராமன் அரக்கரைக் கொன்றான்.
4. பூனை எலியைப் பிடித்தது.
5. அவள் பாலைக் காய்ச்சினாள்.

| | எழுவாய் | பயனிலே | செயப்படுபொருள் |
|---|---|---|---|
| 1. | .................. | .................. | .................. |
| 2. | .................. | .................. | .................. |
| 3. | .................. | .................. | .................. |
| 4. | .................. | .................. | .................. |
| 5. | .................. | .................. | .................. |

*III.* கருத்து விளங்க வசனம் ஆக்குக:

உதாரணம்: விரித்து ஆடும் மயில் தோகையை. இவ்வாக்கியத்தின் கருத்து விளங்கவில்லை. இவ்வாக்கியத்தை மாற்றி எழுதினால், "மயில் தோகையை விரித்து ஆடும்" என வரும்.

இவ்வாறே பின்வரும் வாக்கியங்களையும் எழுதுக.

1. என்னும் பெரும்புலவரால் திருவள்ளுவர் திருக்குறள் இயற்றப்பட்டது.

.......................................................................

2. கூவும் சேவல் அதிகாலையில்.

.......................................................................

3. மிகவும் சிறந்தது உணவுப் பொருள்களில் பால்.

.......................................................................

4. வடிவம் உடையது மாங்கனி இலங்கை.

.......................................................................

*IV.* எதிர்ப்பதங்கள் தருக.

| | | | |
|---|---|---|---|
| 1. நாகரிகம் | .................. | 4. நல்லார் | .................. |
| 2. செல்வம் | .................. | 5. வழக்காளி | .................. |
| 3. இளமை | .................. | 6. நன்செய் | .................. |

V. ஒத்த கருத்துள்ள சொற்கள் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. பாடசாலை | .................. | 2. பாம்பு | .................. |
| 3. ஆசிரியன் | .................. | 4. தெரு | .................. |
| 5. உணவு | .................. | 6. மனை | .................. |
| 7. ஆலயம் | .................. | 8. அழகு | .................. |

VI. "உமது பாடசாலை." இதைப்பற்றி நான்கு சொற்களுக்குக் குறையாத ஐந்து வசனங்கள் எழுதுக.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

VIII. பின்வரும் சொற்களை வைத்து ஒவ்வொரு வசனம் எழுதுக.

1. அறம் ..............................................................................

2. ஆலயம் ..............................................................................

3. சத்தியம் ..............................................................................

4. சூரியன் ..............................................................................

5. யானை ..............................................................................

6. தாமரை ..............................................................................

7. வறுமை ..............................................................................

VIII. பின்வரும் பகுதிகளை வைத்து முக்காலங்களையும் நிரப்புக.

| | பகுதி | இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| 1. | கொடு | .............. | .............. | .............. |
| 2. | படி | .............. | .............. | .............. |
| 3. | அரி | .............. | .............. | .............. |
| 4. | முடி | .............. | .............. | .............. |
| 5. | அழி | .............. | .............. | .............. |

## 18ஆம் பயிற்சி

1. பின்வரும் பகுதியை அவதானமாக வாசித்து அதற்குக் கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.

ஒரு மரத்தின் கிளையில் இரண்டு காக்கைகள் கூடு கட்டி அதில் வசித்து வந்தன. அந்த மரத்தினடியில் இருந்த புற்றில் ஒரு பாம்பும் வசித்து வந்தது. அக்கூட்டில் பெண்காகம் இடுகின்ற முட்டைகளை எல்லாம் புற்றில் இருந்த அப்பாம்பு நாள்தோறும் குடித்துப்போவது வழக்கம். அதனால் வருந்திய ஆண்காக்கை தனது சிநேகிதனான நரியிடம்போய். தமக்கு நேர்ந்த விபத்தைச் சொல்லி, அப்பாம்பைக் கொல்வதற்கு உபாயம் கேட்டது. அதற்குநரி, "இவ்வூர் அரசனுடைய மனைவி குளிக்கும்போது தன் ஆபரணத்தைக் கழற்றி வைப்பாள். அச்சமயத்தில் நீ போய் அதனை எடுத்துக் கொண்டு வந்து பாம்பு வசிக்கும் அந்தப் புற்றினுள் போடவேண்டும். ஆபரணத்தைத் தேடி வரும் அரசனின் வேலையாட்கள் அப்பாம்பைக் கொன்று ஆபரணத்தை எடுத்துக்கொண்டு செல்வார்கள்" என்று உபாயம் சொல்லிக் கொடுத்தது. காக்கையும் அப்படியே செய்தது. உடனே அரசனது ஏவலாளர்கள் பாம்பைக் கொன்று ஆபரணத்தை எடுத்துக்கொண்டு போனார்கள். காகங்கள் சுகமாக வாழ்ந்தன.

1. காக்கைகளின் கூடு எங்கே கட்டப்பட்டிருந்தது?

..........................................................................................

2. பாம்பின் புற்று எவ்விடத்தில் இருந்தது?

..........................................................................................

3. காக்கைகளுக்கு ஏற்பட்ட துன்பம் யாது?

..........................................................................................

4. தமக்கு நேர்ந்த விபத்தைக் காகம் யாரிடத்தில் கூறியது?

..........................................................................................

5. நரி கூறிய உபாயம் யாது?

.........................................................................

6. நரியின் தந்திரத்தைக் கேட்ட காகம் யாது செய்தது?

.........................................................................

7. பாம்பு எவராற் கொல்லப்பட்டது?

.........................................................................

II. பின்வரும் ஆண்பாற் சொற்களுக்குப் பெண்பாற் சொற்கள் தருக

1. தகப்பன் .................... 4. மாமன் ....................

2. அண்ணன் .................... 5. மைத்துனன் ....................

3. தம்பி .................... 6. சகோதரன் ....................

III. பின்வருவனவற்றின் இறந்தகாலச் சொற்களைத் தருக.

1. இறப்பான் .................... 4. விற்பான் ....................

2. செல்கின்றீர்கள் .................... 5. வருவோம் ....................

3. பாடுகின்றான் .................... 6. உண்பீர் ....................

IV. பின்வரும் பதங்களுக்கு எதிர்ப்பதங்கள் எழுதுக.

1. வேகமாக .................... 4. உயரமாக ....................

2. பெரியது .................... 5. பாரமாக ....................

3. வெண்மை .................... 6. தூரத்தில் ....................

V. விடப்பட்ட காலங்களை நிரப்புக.

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1. | ஓடினன் | ........................ | ........................ |
| 2. | ........................ | படிக்கிருர்கள் | ........................ |
| 3. | ........................ | ........................ | கூவும் |

VI. கீறிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை வைத்தெழுதுக.

1. தாமரை மலர் ........................ நிறம்.
2. பலாப்பழம் மிகவும் ........................
3. இரும்பு ........................ இருக்கும்.
4. மோட்டார் வண்டி ........................ ஓடும்.
5. தென்னை ........................ வளரும்.

VII. இதைப்பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக.

பசு

1. ........................
2. ........................
3. ........................
4. ........................
5. ........................

VIII. ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுக.

1. சூரியன் ..............................
2. சந்திரன் ..............................
3. பூமி ..............................
4. யானை ..............................
5. பாம்பு ..............................
6. நாய் ..............................

IX. பின்வரும் சொற்களை அமைத்து வாக்கியம் எழுதுக.

1. கரி ..............................

கறி ..............................

2. உரி ..............................

உறி ..............................

3. எரி ..............................

எறி ..............................

X. பிழைகளைத் திருத்தி எழுதுக.

1. நானும் நீயும் போனேன்.

..............................

2. விளக்கு நன்ராய் எரிஞ்சுது.

..............................

